திரு. கே. விநாயகம் : சார், இந்த இரு சாராருக்கும் ஏற்பட்டிருக்கிற சச்சரவுகளைப்பற்றி ஏதாவது மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அதைப் பற்றி பரிசீலிக்க, அவர்களுக்குச் சேரவேண்டிய சலுகைகளைத் தர ஆராய்ச்சி செய்ய அரசு முன்வந்ததா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : மூலக்கேள்வி, தோட்டத் தொழிலாளர்களுக்காக ஏதாவது கமிஷனர் அவார்ட் வழங்கினரா என்பது பற்றியது, அப்படி இல்லை. ஆனல் 1968, 1969, 1970-ஆம் ஆண்டிற்கான போனஸ் தரப்படவில்லை. அதைப்பற்றி ஒரு உடன்பாடு காணவேண்டுமென்று அந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டது. உடன்பாடு காணப்பட்டு; செட்டில்மெண்ட் உடன்பாட்டில் கையெழுத்து போடப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே சுமுகமான தீர்வு காணப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே 23 தோட்டங்களுக்கு அம்மாதிரி உடன்பாடு சென்ற ஆண்டு காணப்பட்டிருக்கிறது.

தென்னை ஆராய்ச்சி நிலையம்.

294 வினா.—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் நமது நாட்டில் செயல்பட்டு வருகிறதா?

(இ) இல்லையெனில், இனியேனும் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) தற்பொழுது மண்டல தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று வேப்பங்குளம் (தஞ்சாவூர் மாவட்டம்) என்னும் இடத்தில் செயல்பட்டு வருகிறது.

(இ) மேற்கூறிய தென்னை ஆராய்ச்சி நிலையத் (வேப்பங்குளம்) தைத் தவிர இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக தென்னை ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வாராய்ச்சி நிலையம் விரைவில் தகுந்த இடம் கிடைத்தவுடன் செயல்படவுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இம்மாதிரியான ஆராய்ச்சியின் காரணமாக தென்னையை மேலும் அபிவிருத்தி செய்ய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கையை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆராய்ச்சி நிலையம் தேவை என்பதை உணர்ந்து ஏற்கெனவே, 1958-ஆம் ஆண்டு, வேப்பங்குளம் என்னுமிடத்தில் ஒரு நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது. மேலும் இப்படிப்பட்ட நிலையம் அவசியம் என்பதை உணர்ந்து 1970-71-ஆம் ஆண்டில் இன்னொரு நிலையம் இராமநாதபுரம் மாவட்டத்தில் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தகுந்த இடம் கிடைத்தபின்னர் அது செயல்படத் துவங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதைத்தவிர வேறு வேறு புதிய நிலையங்களை நிறுவ தற்சமயம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படுவதை வரவேற்கின்ற அதேநேரத்திலே, இந்த அரசு வந்ததற்குப் பின்னல் ஐ. ஆர். 8, குட்டை வாழை போன்ற இந்தப் பயிர்

களுக்கு கடன் உதவியை விவசாயிகளுக்குத் தருவதைப்போல், தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் தேங்காய்ப் பற்றுக்குறையைப் போக்கும் வகையிலே, வட மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பிருக்கும் வகையிலே இதை நல்லமுறையில் உருவாக்க வேண்டி, விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் உதவி அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மூலக்கேள்வி 'தென்னை ஆராய்ச்சி நிலையம் ஏதேனும் நமது நாட்டில் செயல்பட்டு வருகிறதா?' என்பதாகும். உறுப்பினர் அவர்கள் ஐ.ஆர். 8, குட்டை வாழை போன்றவற்றிற்குக் கொடுப்பதைப் போல் பணப்பயிரை உற்பத்தி செய்வதற்கும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதைப் பற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

I.R.8 variety of Paddy

* 295 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the Government propose to launch upon a crash programme for cultivating high yielding I.R. 8 paddy over five lakh acres this Navarai season in Chingleput, North Arcot and South Arcot districts?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நவரை, சுவர்ண வாரிப் பருவங்களில், மிகு பயன்தரும் நெல்ரகங்களை, இம்மாநிலமெங்கும் பயிரிட இவ்வரசு விரைவுத் திட்டம் ஒன்றைத் தொடங்கியது. செங்கல்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் மட்டும் ஐ.ஆர். 8 நெல்லை ஏறக்குறைய ஐந்து லட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடத் திட்டமிடப்பட்டது. நடைமுறையில் மொத்தம் 6.15 லட்சம் ஏக்கர் பரப்பளவில் ஐ. ஆர். 8 நெல் பயிரிடப்பட்டது.

திரு. கே. விநாயகம் : இந்தக் குறிப்பிட்ட ஐ.ஆர். 8 என்ற நெல் 'ஹை ஈல்டிங் வெரைட்டி' என்று சொல்கிறார்கள். அதன் பொருள் என்ன? ஏற்கனவே இருக்கிற ரகங்களை விட அதிகமாக எவ்வளவு மணி—'இன்ப்ரொப்போர்ஷன்' எவ்வளவு க்ரெயின் வருகிறது? என்று சொல்லமுடியுமா? இந்த நெல் விளைந்த பிறகு அதிலிருந்து கிடைக்கக்கூடிய அரிசியைச் சாப்பிட்ட மக்கள் அது சுலபமாக ஜீர்ணிப்பதில்லை என்று பொதுவாக நாட்டிலே ஒரு புகார் இருக்கிறது. அதோடு அதிலுள்ள வைக்கோலைச் சாப்பிட்ட கால்நடைகள், காட்டில் எல்லாம் கூட அதை ஜீரணிக்க முடியாமல் தத்தளிக்கிறது என்று பொதுவான ஒரு கருத்து விவசாயிகளிடையே இருக்கிறது. அது உண்மையாக இருந்தால் அதைப் போக்குவதற்கு ஏதாவது நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மிக அதிக விளைச்சல் தரக்கூடிய ஹை ஈல்டிங் வெரைட்டி ஒரு அதிசய நெல். சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு 1200, 1400 கிலோதான் விளையும் என்றால் இந்த ஐ. ஆர். 8 நெல்லை பயிரிடுவதால் 4000 கிலோ கூட—கோவை மாவட்டத்தில் அப்படி ஒரு விவசாயி ஒரு ஏக்கரில் நாலாயிரத்திச் சொச்சம் கே.ஜீ.